REGD. No. M. 6311

PHONE No. [illegible]

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 271

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: சித்திரை 18உ வெள்ளி (30—4—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 19உ சனி (1—5—54)

மதுவிலக்கு: கா. தலைவர் எதிர்ப்பு!

மூன்றில் ஒரு பங்கு வருமானம் போய்விடுமே

வேறு வரிகள் போட்டால் மக்கள் ஆத்திரப்படுவரே!

ஐதராபாத் காங்கிரஸ் அமைச்சர் அலறல்

பத்ராசலம், ஏப். 29—

"ஐதராபாத் மாநிலத்தில் மதுவிலக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டால், அரசாங்கத்தை நடத்த முடியாமல் போகாது என்றாலும் மிகவும் கஷ்டமானதாகும். ஏனெனில், அரசாங்கத்திற்கு இப்பொழுது கிடைத்துவருகிற வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு கலால் இலாகா மூலம் கிடைப்பதாகும்."

"மதுவிலக்கு அவசியம்தான் என்பதை நான் ஒப்புவதானாலும், கலால் வகையில் கிடைக்கும் பெரிய வருமானத்தைக் கருதும்பொழுது, மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதென்பது அரசாங்கத்திற்குப் பொருத்தமுடையதாக இல்லை,"

—என ஐதராபாத் பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவரும், கலால்-நிலவரி அமைச்சராகவும் உள்ள கொண்டா வெங்கிடரங்க ரெட்டி, கம்மாமெத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டார்.

வேறு வரிகளை போடப்படுவதானால் மக்கள் அவைகளை எதிர்க்க முன்வருவர் என்றும், அதனால் மதுவிலக்கினால் அண்டுவிழும் வருமானத்தை ஈடு செய்ய முடியாமல் போகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கள்ளுக் கடைகளைக் குத்தகைக்கு விடும் வகையில், கள்ளிறக்குவோர்களுக்கும் குடிப்போர்களுக்கும் இடையில் உள்ள குத்தகைதாரர்களை அறவே அகற்றுவதற்காக வாரகல் ஊரில் 'கள்ளிறக்குவோர் திட்டம்' ஒன்று பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், அம்பரீட்சையின் முடிவைக் கொண்டு, திட்டத்தை மேலும் விரிவாக்கலாமா கூடாதா என்பதைத் தீர்மானிக்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார்,

ஜனநாயகம் படும்பாடு!

இனவேற்றுமைக்கு எல்லையில்லை?

கேப்டவுன், ஏப். 28—

தென் ஆப்பிரிக்கா பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆப்பிரிக்கர்களின் பிரதிநிதி கம்யூனிசம் ஒழிப்புச் சட்டப்படி பார்லிமெண்டில் தனது ஸ்தானத்தில் அமர முடியாதென்று நீதி நிர்வாக மந்திரி உத்திரவு பிறப்பித்தார்.

தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவித்ததும், அவர், பார்லிமெண்டு கட்டிடத்தை நோக்கிச் செல்கையில் ஒரு சாதாரண உடை தரித்த அதிகாரியால் கையைப் பிடித்து நிறுத்தப்பட்டார்.

இந்தோ-சீனா: பிரான்ஸ் கிலி!

அமெரிக்காவிடம் தஞ்சம் புகுந்தது

அமெரிக்கத் தலைவர் வெளியிடும் தகவல்

வாஷிங்டன், ஏப் 29—

இந்தோ-சீனாவில் அமெரிக்கா தலையிட வேண்டும் எனப் பிரான்ஸ் கேட்டது உண்மைதான் என்றும் தலையிடுமாறு பிரிட்டனை வற்புறுத்த அமெரிக்கா மறுத்ததும் உண்மைதான என்றும் அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் கூறினார்.

"இந்தோ-சீனப் போருக்கு பணமும், ஆயுதங்களும் கொடுப்பதற்கு மாத்திரமே அமெரிக்க சட்டசபை அனுமதி அளித்திருக்கிறது; சட்டசபையின் அனுமதி பெறாமல் இந்தோ-சீனாவுக்கு அமெரிக்கப் படைகளை அனுப்ப முடியாது" என்றார்.

சமாதானம் நிலை நாட்டப்பட்டு, அணுசக்தியில் ஏற்படும் முன்னேற்றங்கள் சுதந்திர உலகத்தின் பொருளாதாரநிலையைத் திடமாக்கக்கூடும்.

இந்தோ-சீனா—இடையூறு!

ஆசியப் பிரதமர்கள் மாநாட்டில் ஐவரும் ஒன்றுபடவில்லை?

கொழும்பு, ஏப். 29—

கொழும்புவில் நடந்த ஆசியப் பிரதமர்கள் மாநாட்டில் இந்தோ-சீனாவில் வெளியார் தலையிடக் கூடாது என்ற கொள்கையை விவாதத்தின்போது ஒப்புக்கொண்ட முகமது அலி, பின்னர் தீர்மானத்தைத் தயாரிக்கையில் அந்தப் பகுதியை ஆட்சேபித்தார்.

வல்லரசு கோஷ்டி எதிலும் சேரக் கூடாது என ஒப்புக்கொண்ட பாகிஸ்தானும், இலங்கையும் "சர்வதேச கம்யூனிசத்தை எதிர்ப்பது" என்ற பெயரால் ரஷ்ய கோஷ்டிக்கு எதிரான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தன. இதை இந்தியா, இந்தோனேஷியாப் பிரதமர்கள் ஆட்சேபித்தனர்.

கருத்து வேற்றுமை காரணமாக இந்தோ-சீனா, கம்யூனிசம் பற்றிய தீர்மானங்கள் அதிகாரிகளின் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கின்றன.

ஆசியாவிலிருந்து காலனி முறை ஒழியவேண்டும் என்பதை ஐந்து பிரதமர்களும் ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது.

அணுகுண்டு, நீர்வளிக் குண்டுகளின் சோதனையை நிறுத்துவதற்கு இடைக்கால ஒப்பந்தம் வகுக்க வேண்டும் என்பதையும் ஐந்து பிரதமர்களும் ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது.

திருச்சி சிறையில் கல்லக்குடி தோழர்கள்

கருணாநிதி சந்தித்தார்

திருச்சி சிறையில் இருக்கும் கல்லக்குடி தோழர்களில ஜாமீனில் விடுதலையானவர்கள் போக மற்றவர்களை 29—4—54-ல் தோழர் மு. கருணாநிதியும், தோழர்கள் பராங்குசம், ராமி, ராதா, ஷெரீப் ஆகியோரும் சென்று சந்தித்துப் பேசினர், 28—4—54ல் தோழர்கள் ராதா கிருஷ்ணன், ஐ எம். ஷரீப், கருமலை ஆகியோரும், 29—4—54ல் தம்புசாமி, பிச்சை, துரைராஜ் ஆகியோரும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்கள். மற்றவர்களையும் ஜாமீனில் எடுக்கும் முயற்சிகள் திருச்சி கழகத்தினரால் துரிதமாக நடத்தப்படுகின்றன,

சென்னையை நோக்கி ஆசிரியர் படை

நாமக்கல், ஏப். 26—

25—4—54 அன்று 1 மணிக்கு நாமக்கல் தாலுகா ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் நிர்வாகக் குழுக் கூட்டம் திரு. என். என். முத்துசாமி தலைமையில் நடைபெற்றபோது, வருகிற மே முதல் வாரத்தில் சட்ட சபைக் கூட்டத்தின்போது சைக்கிளில் அதக் குழு ஒன்று புறப்படுச் சென்னை சென்று மனு ஒன்று சமர்ப்பிப்பதென்றும், பொது மக்களிடம் 300 ரூ. நிதி திரட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கட்டாய இந்தி கண்டு

டாக்டர் சுப்பராயன் மனக்கொதிப்பு!

கண்டிக்கவே சபைக்கு வந்திருப்பதாக அறிவிப்பு

இந்தித் திணிப்பை வங்காளிகளும் எதிர்க்கின்றனர்

"தென் இந்தியாவிலிருந்தும், வங்காளத்திலிருந்தும் வரும் பல உறுப்பினர்கள் இந்தியை வலுக் கட்டாயமாகப் புகுத்துவதை விரும்பவில்லை."

"விருப்பமில்லாத மக்கள்மீது இம்மொழியைத் திணிக்க புருஷோத்தம தாஸ் தாண்டன், சேத் கோவிந்த தாஸ் போன்றவர்கள் முயற்சி செய்கின்றார்கள்."

"இந்திய மேல் சபைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் பி சுப்பராயனும், இம்மொழியை வற்புறுத்துவதை விரும்பவில்லை; அதைக் கண்டிக்கவேதான் இங்கு வந்திருப்பதாகவும் நமது நிருபரிடம் கூறினார்.

தேசிய மொழியை கற்க இந்தியாவின் பல பாகங்களிலுள்ள மக்களும் எவ்வளவு தூரம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மதிப்பிடு முன் அரசியலில் நிர்ணயிக்கப்பட்டுள்ள 15 ஆண்டு காலம் முடிவடைய வேண்டுமென்பதே தமது கருத்து என்றார் அவர்!

அதேபோலத்தான் வங்காள உறுப்பினர்களில் பலரும் கருதுகின்றனர்.

கட்சியில் சேர மறுத்ததால்.......

கம்யூனிஸ்டுகளுக்குக் கோபம்

சேர மறுத்தக் குடும்பமே தாக்குண்டதாம்!

நன்னிலம், ஏப். 28—

நன்னிலம் தாலுகா பில்லாலி கிராமத்தைச் சேர்ந்த முத்துசாமி வாய்க்காரரும், அவரைச் சேர்ந்தவர்களும் ஈஸ்வரவாசல் என்ற கிராமத்திற்கு கல்யாணத்திற்குச் சென்று திரும்பி வரும்போது 25—4—54-ம் தேதி மாலை 3-30 மணி சுமாருக்கு மேற்படி குழுவினர் கம்யூனிஸ்டு கட்சியில் சேர மறுத்ததற்காக வழிமறித்துத் தாக்கி, நான்கு பேர்களைக் கட்டிவைத்து அடித்ததாக கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களெனப்படும் ஏனங்குடி சௌந்திரராஜன், அருள் தங்கசாமி உட்பட 25 நபர்கள்மீது நன்னிலம் போலீசார் 147, 148 323, 343 பிரிவின்படி வழக்கு பதிவு செய்துள்ளனர்.

புதிய கல்வி திட்டம் பற்றி

கா. சட்டசபை கட்சி விவாதிக்கும்

புதிய வரி ஏற்பாட்டையும் ஆராயும்

சென்னை, ஏப். 29—

காங்கிரஸ் சட்ட சபை கட்சியின் பொதுக்கூட்டம், மே 5-ம் தேதி மாலை 5-30 மணிக்கு 'ராஜாஜி' மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

அக்கூட்டத்தில் புதிய கல்வித் திட்டத்தைக் குறித்து விவாதம் நடைபெறுமெனவும், ஆச்சாரியார் அமைச்சர் குழு கொண்டு வந்துள்ள புது வரிகள் பற்றியும் ஆராயப்படுமெனவும் தெரியவருகிறது.

எப்படி இருந்தாலும் புதிய கல்வித் திட்டத்திற்குப் புதை குழி தேடப்படும் என்றே நம்பப்படுகிறது. புதிய திட்டத்திற்குப் பொதுவாக மக்களிடம் உள்ள எதிர்ப்பையும், குறிப்பாக கிராமத்தவர்களிடம் உள்ள தீவிர எதிர்ப்பையும் காமராசர் விளக்கமாக அறிந்திருப்பதாகவும், எனவே திட்டத்தைக் கைவிடுவதில் அவரும், அவரைச் சார்ந்த பெரும்பான்மையினரும் தீவிரமாக இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

திட்டம் கைவிடப்படாமற் போனால், வருகிற ஜில்லா போர்டு தேர்தல்கள் காங்கிரஸ் கட்சிக்குப் பெரிய அளவில் தோல்வியைக் கொடுக்கும் என்று பெரும்பாலான உறுப்பினர்கள் அச்சம் கொண்டிருப்பதின் விளைவாக, திட்டத்தைக் கைவிடுமாறு அவர்கள் ஏற்கனவே வலியுறுத்தி வந்திருக்கிறபோதிலும், அதை இப்பொழுது மேலும் வலிவாக வற்புறுத்த இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 30—4—54 வெள்ளி

ஆசிய நாடுகள்தான்!

கொழும்புவில் கூடியுள்ள ஐந்து நாட்டவர்களுக்குள் ளும், தீர்த்துக் கொள்ளப்பட வேண்டிய சிக்கல்கள் இருக்கின் றன; அவைகளைத் தங்களுக்குள்ளாகவே முதற்கண் முயன்று, சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதுதான் சிறப்பு என்று நேற்று எழுதியிருந்தோம். அவைகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்காத நிலையில், பேரரசுகளின் நடத்தைக்கு முற்றுப் புள்ளி வைக்க முயற்சி எடுத்துக் கொள்வது, வேதனைதரும் காட்சி என்றும் முன்னர் எடுத்துக் காட்டி இருந்தோம்.

காஷ்மீர் பிரச்னையின் காரணமாக, இந்தியத் துணைக் கண்டத்திற்கும் - பாகிஸ்தானுக்கும் பிணக்கும் பகையும் ஏற்பட்டு ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. பேரரசு களின் சுயநல வேட்டைக்காடாக இருக்கும் ஐக்கிய நாடு சபை காஷ்மீர் சிக்கலில் முடிவுகாணப் புகுந்து, மூன்று ஆண்டுக ளாகிவிட்டன. சிக்கலைத் தீர்த்துக் கொள்ளவேண்டிய கராச் சியும், டெல்லியும் இங்கிருக்க, பிரச்னையில் தீர்ப்பளிக்க உரிமை பெற்றுள்ள காஷ்மீர் மக்கள் காஷ்மீரிலேயே இருக்க, சிக்கலுக்குப் பரிகாரம் காண, வழிவகை அமைத்துத் தரும் பொறுப்பை ஐ. நா. சபைக்கு விட்டுவிட்டது. ஐ. நா சபைக்குக் காஷ்மீர் சிக்கலைத் தூக்கிக்கொண்டு ஓடினதே குற்றம்—முதற் கோணல்! முதற்கோணல் முற்றும் கோணல் என்று முடிந்தது.

ஐ. நா. சபையின் முடிவிற்கு, இந்தியா கட்டுப்பட்டு நடக்க ஒப்பவில்லை என், இந்தியாமீது பாகிஸ்தான் குற்றம் சாட்டுகிறது. பாகிஸ்தான்தான், ஐ. நா. சபையின் முடிவை மீறுகிறது என, பாகிஸ்தானை இந்தியா தூற்று கிறது.

இதற்கிடையில், காஷ்மீர் மக்களின் ஒருமித்த ஆதர வைப் பெற்று உருவெடுத்துள்ள அரசியல ஆக்கமன்றம், காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்து விட்டது எனத் தீர் மானித்துவிட்டதால், இனி பெருஜன வாக்கெடுப்புக்குத் தேவையே இல்லையென, காஷ்மீர் முதல்மந்திரி பக்ஷி குலாம் அறைகூவிய வண்ணம் உள்ளார்.

காஷ்மீர் அரசியல் ஆக்க மன்ற முடிவை அப்படியே ஏற்றுக் கொண்டு, காஷ்மீர் இந்தியாவுடன் இரண்டறக் கலந்துவிட்டது, இனி வாக்கெடுப்புக்கு இடமே கிடையாது என, இந்தியா திட்டவட்டமாக இதற்குள் அறிவித்து இருக்க வேண்டும். எது காரணம் பற்றியோ, இத்துறையில், இந்தியாவிற்குத் துணிவேற்படவில்லை. பக்ஷி குலாம் மாதிரி வெட்டொன்று துண்டு இரண்டு என்று பேசாமல், ராஜ தந்திர மழுப்பல் பணியை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்காவுடன் பாகிஸ்தான் இராணுவ உடன்படிக் கைச் செய்துகொண்டதற்கு எவ்வளவோ காரணங்கள் இருக் கக்கூடும். அவைகளில், காஷ்மீர் பிரச்னை சிக்கல் தீராததும் ஒரு முக்கிய காரணம் என்பது மறுக்கக்கூடியதல்ல

உலகத்திற்கு உபதேசம் செய்வது என்றால், ஒவ்வொரு வருக்கும் அதில் கொஞ்சம் கொஞ்சம் விருப்பமும் உண்டு, பயிற்சியும் உண்டு. அந்தப் பழக்கம், படித்த அரசியல்வாதி களிடத்தில் அமோகம்! அதிலும், ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருப்பவர்களிடமோ, அது தொழுநோய் போல் பற்றிக்கொண்டு கிடக்கிறது.

போதனை புரிவதிலே, உலகத்தில் உள்ள எல்லா நாட்டுப் பிரதமர்களையும், பின்னடையச் செய்யக்கூடிய ஆற்றல் படைத்திருப்பவர் காஷ்மீர் பண்டிதராகும். தாம் படித்த அரசியல், அறநெறி தத்துவங்களை எல்லாம், பிறர் நெஞ்சுருக, பொருத்தமான சொற்களை அடுக்கி, அலங்காரமாய் பேசுவ தில் அவருக்கு அவரேதான் இணை!

அவருடைய அறிவும் ஆற்றலும், சொற்திறமும், அமெ ரிக்காவின் அரவணைப்பைத் தேடுவதிலிருந்து பாகிஸ்தா னைத் தடுத்து நிறுத்த உதவவில்லை. பாகிஸ்தானின் போக்கு, அமெரிக்காவின் இராணுவ ஆதிக்கத்தை பாரதமாதாவின் பக்கத்திலேயே கொண்டுவந்து நிறுத்தி வைத்திருக்கிறது.

அடுத்தது இந்தோ—சிலோன் சிக்கல். செய்துகொண்ட உடன்பாடோ சிலோனில் வாழ்ந்து வரும் லட்சக்கணக்கான தமிழர்களை கேடுகெட்ட அகதிகளாக ஆக்குவதாக இருக் கிறது. பண்டித ரோ, போதிக்கும் புனிதராக இருக்கிறாரே யல்லாது, சிலோன் கொடுமையைத் தட்டிக் கேட்பவராக இல்லை.

இந்தியத் துணைக் கண்டத்தில், பண்டிதரின் காங்கிரஸ் ஆட்சியில், பிரஜா உரிமை மதிப்பாடு கொஞ்சமல்ல. இதே விருந்தை ருசி பார்க்கும்படி, இந்தியப் பிரதமருக்கே, சிலோன் பிரதமர் கொத்தலாவலை அளித்திருக்கிறார். நிற்க,

பாகிஸ்தான், சிலோன், இந்தியா ஆகிய மூன்று நாடு களும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் பங்கு கொண்டுள்ள நாடு களாகும்! மூன்றும் ஆசிய நாடுகள்! இவர்களுக்குள்ளாக உள்ள சிக்கல்களை, இவர்களுக்குள்ளாகவும் தீர்த்துக்கொள்ள முடியவில்லை! மற்ற காமன்வெல்த் நாடுகளாலும் தீர்த்து வைக்க முடியவில்லை! ஐ. நா. சபையாலும் தீர்த்து வைக்க முடியவில்லை!

ஆனால், இவைகள்தான், ஒன்றுகூடி, இந்தோ-சீனாவின் எதிர்காலத்திற்கு ஆலோசனை கூறக் கிளம்பி இருக்கின்றன!

'வாழ், வாழவிடு' என்று பண்டிதர் தத்துவபோதனை அளிக்கிறார்! அந்தப் போதனையைத் தாம் எந்த அளவு, மேற் கொண்டு ஒழுக முன்வருகிறார் என்பதை வரலாறு சுட்டிக் காட்டுகிறது!

இந்தோ-சீனாவை விட்டு பேரரசுகள் வெளியேற வேண் டும் என்பது பண்டிதரின் யோசனை. வியட்நாமில் போரிட, அங்கு அனுப்பப்பட்ட அமெரிக்க விமானத்திற்குத் தங்க இடம் கொடுத்தது கராச்சி! மேற்கொண்டு செல்ல விமா னத்திற்கு எரி எண்ணெய் ஊற்ற இடம் கொடுத்தது சிலோன்!

மூன்றும் ஆசிய நாடுகள்தான்! அமெரிக்க நடத்தையில் மூன்றும் நடந்துகொண்ட விதம் இதுதான்!

கொழும்பு திட்டத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது பாகிஸ்தானும், இந்தியாவும், சிலோனும்; அதில் அதிருப்தி தெரிவித்திருக்கிறது பர்மா!

இந்தியாவும், சிலோனும் அரிசி உற்பத்தியில் சுயதேவை யைப் பூர்த்தி செய்துகொள்வதில், பர்மாவிற்கு அதிருப்தி தான் இருக்க முடியும், பர்மா அரிசியையே நம்பி வாழும் பொருளாதார அமைப்புக் கொண்டு இருப்பதால்!

சிலோனில் நெசவாலை பெருகினால், இந்திய ஆலைத் துணிக்கு ஏற்றுமதி குறையும்! இந்தியப் பொருளாதாரம் சரியும்!

சணல் ஆலைகள் இந்தியாவில்; அதற்கான மூலப் பொரு ளான சணல் பாகிஸ்தானில்! இந்தியாவில் சணல் உற்பத் திக்கு ஏற்பாடாகி விட்டது; அதுபோலவே சணல் ஆலை களும் பாகிஸ்தானில் துவங்கிவிட்டன!

இரண்டு நாடுகளிலும் உற்பத்தி செய்யப்படும் சணல் பொருட்களை விற்க சந்தை தேவை! வியாபாரப் போட்டி! விலை வீழ்ச்சி! மக்களின் வாழ்க்கைத் தரம் குறையும்!

ஜாவா சர்க்கரையை இங்கு இறக்குமதி செய்தால், உத் திர பிரதேச சர்க்கரை ஆலை சொந்தக்காரர்கள் ஆர்ப்பாட் டம் செய்யக் கிளம்புவர்! ஜாவா சிரிக்காது; சீறவே கொள் ளும்! இரண்டும் ஆசிய நாடுகள்தான்!

ஐந்தாண்டுத் திட்டத்தில் பிரிட்டிஷ் நீதி நிபுணரின் அதிருப்தி

—]o[—

மதுவிலக்கு நிலை பற்றி முன்னாள் அமைச்சர் கருத்து

— (:) —

வளர்ந்து வரும் ஜனப் பெருக்கம் குறித்து ஜெர்மி ரெய்ஸ்மேன்

"நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாநிலங்களில் எல்லாம், மது விலக்கு முழுத் தோல்வி அடைந்துள்ளது என் பதை, அதை ஆராய்ந்து பார்க்கும் நடுநிலையாளர் அனைவரும் ஒப் பியே தீருவர். குறிப்பிடத்தகுந்த அளவு வருமானத்தை மாநிலங் கள் மதுவிலக்கினால் இழந்துவிட்டன. அத்தொகையை ஐந்தாண் டுத் திட்டத்திற்கு ஈடு செய்திருக்க முடியும்."

"ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்றத்தை நிறைவேற்ற ரூ. 250 கோடிவரை பணப் பெருக்கத்தை நம்பியிருப்பது பெருங் கவலையைத் தரக்கூடியதாக இருக்கிறது. இம்முறை பெரும் குறைபாடு உடையதாகும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற திட்டத்தின் நோக்கத்திற்கு எதி ராக, பணப் பெருக்க ஏற்பாடு, வாழ்க்கைத் தரத்தைக் குறைத்து விடும்."

இவ்வாறு, இந்திய சுதந்திரத் திற்கு முன், இந்திய சர்க்காரின் நிதிமந்திரியாக இருந்த ஜெர்மி ரெய்ஸ்மேன் லண்டன் கிழக்கு இந்திய சங்கத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார். அவர் சமீபத்தில், நான்கு வாரம்வரை இந்தியாவில் தங்கி இருந்தார்.

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன் இந்தியா வில் வெறுக்கப்பட்ட ஆங்கிலே யர்களைக்கூட, இப்பொழுது இந் தியர்கள் பாராட்டி உபசரிக்கிறார் கள் என்றும், முன்காலத்தில் வரவேற்காத ஆங்கிலேயர்கள் கருத்துக்குக்கூட இப்பொழுது இந்தியர்களிடமிருந்து வர வேற்பு கிடைக்கிறது என்றும், ரெய்ஸ்மேன் குறிப்பிட்டார். அவர் இந்தியாவின் ஜனப் பெருக் கத்தைப் பற்றியும் கூறினார். அது வருமாறு:—

"ஜனப் பெருக்கம் மிகமிக முக்கியமான பிரச்னையாகும். இத்துறையில் தீவிரமான நட வடிக்கையை இந்திய சர்க்கார் மேற்கொள்ள வேண்டும். இப் பொழுது பெருகிவரும் போக் கிலேயே ஜனப் பெருக்கு இருந்துவருமானால், அதன் விளைவுகளைத் தணிக்கும்வகை யில், விரைவில் தொழில் வளத்தைப் பெருக்க இந்தியா வால் சாத்தியமாகும் என்பது எனக்கு நம்பிக்கை இல்லை."

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்த அகதி குடும்பத்தைச் சேர்ந்த அன்னபூரணி என்ற 16 வயதுப் பெண்ணுக்கு உத்திர பிரதேச சர்க்கார் தையல் வேலை யில் பயிற்சியளித்து, ஒரு தையல் மிஷினுடன், அப்பெண்ணுக்கு திருமணமும் செய்வித்து புனர் வாழ்வு அளித்தது.

சமாதானத்துக்கு சேவை

சர்வதேசத் தொழில் ஸ்தாபனத்தின் பணி

நியூயார்க், ஏப். 30—

சமாதானத்தை விரும்பும் மக் களின் தேவைகளைக் கவனிக்கும் முறையில் சர்வதேசத் தொழில் ஸ்தாபனம் இயங்குகிறது.

1919-ல் சர்வதேச சங்கத்தின் ஒரு பகுதியாகத் தொடங்கப் பட்ட இந்த ஸ்தாபனம் இப்பொ ழுது ஐ. நா. ஸ்தாபனத்தின் ஒரு பிரதிநிதிப் பிரிவாக நடக்கிறது; இதில் இப்பொ ழுது 66 நாடுகள் உறுப்பினராக இருக்கின்றன.

சர்வதேசத் தொழில் ஸ்தா பனத்தில் பங்கெடுத்துக் கொள் வதால் சமாதான நோக்கங்களை முன்னேறச் செய்கிறோம். என வே, வறுமையையும், கஷ்டங் களையும் ஒழிப்பதால், யுத்தம் ஏற்படுவதற்கான காரணத்தை அகற்றுவதுடன், சமாதானத்தை வளர்க்கவும் இந்த ஸ்தாபனம் சேவை செய்கின்றது

சமாதான வளர்ச்சியையும், தகராறுகளைக் கூட்டு முறையில் தீர்த்துக்கொள்வதையும் விரும்பு கிறோம். இந்த ஸ்தாபனத்தின் சேவை சமாதானத்தை விரும் பும் எல்லோருடைய நோக்கங் களையும் நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளது.

பிரிட்டிஷ் தொழிற் கட்சி இடதுசாரி குழுவில் பிளவு

பெவானுக்கு தரப்பட்ட தாக்குதலாம்!

லண்டன், ஏப். 28—

தொழிற் கட்சி 'நிழல் அமைச் சர் குழு'வில் ஒரு உறுப்பினராக உள்ள இடதுசாரி குழுவின் தலைவரான அனுரின் பெவா னுக்கு பதிலாக, அக்குழுவைச் சேர்ந்த ஹரால்ட் வில்சன, அப் பதவியை ஒப்புக்கொள்ள முன் வந்தார். இதுதான், இடதுசாரி யினருக்குள் முதல் முதலாக ஏற்பட்டுள்ள பிளவாகும்.

இச்செயல், பெவான் தலை மைக்கு வெளிப்படையாகத் தரப்பட்ட தாக்குதல் என பெவான சார்பினர் கருத்தறிவிக் கின்றனர்.

ஆஜ்மீர் காங்கிரஸ் ஆறு பிளவாகிவிட்டது

ஆசாத் மேற்கொண்ட ஒற்றுமை முயற்சி படுதோல்வி

ஆஜ்மீர், ஏப். 28—

ஆஜ்மீர் மாநிலக் காங்கிரஸ் 6 பிளவுகளாகச் சிதறிக் கிடக் கிறது. அந்த பலதரப்பட்ட கருத்து வேறுபாடுடைய ஆறு கூட்டத்தினரையும் மத்திய அரசாங்கக் கல்வி மந்திரி மௌலானா அபுல் கலாம் ஆசாத் டில்லிக்கு அழைத்து, அவர்களை எல்லாம் ஒற்றுமை யாகும்படி வேண்டிக் கொண் டது எந்தவிதப் பலனையும் அளிக்கவில்லை. மாறாக அவர் கள், கட்சித் தலைவரை மாற்று வதில் மிகத் தீவிரமாக இருக் கின்றனர்.

முதன் மந்திரியாகவும் கட் சித் தலைவராகவும் இருக்கிற ஹரிபாபு உபாத்தியாயாவின் மீது நம்பிக்கையில்லாத் தீர் மானமொன்றைக் கொண்டுவர அவர்கள் உத்தேசித்துள்ள தாகவும் தெரிகிறது.

இங்குள்ள அரசியல் வட் டாரங்கள் கட்சித் தலைவர் இப்போது தனது விலகல் கடிதத்தைத் தர வேண்டும், அல்லது தன்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானமொன் றைக் கொண்டுவர வேண்டும் என்று கருதுகின்றன.

அண்ணியை மோகித்த அற்பன்!

அண்ணன் கூறிய அறநெறி தோல்வி!

கழுதை மேலேற்றி ஊர்வலம் விடப்பட்டான்!

உதயபூர், ஏப். 27—
இங்குள்ள இளைஞன் ஒருவன் தன் அண்ணியைக் 'காதலி'த்தான்; அண்ணியின் கணவனும் அவனது அண்ணன் எவ்வளவோ புத்திச் சொல்லியும் அந்த இளைஞன் தன் அண்ணியின்மீது கொண்டிருந்த 'காமத்தை'க் கைவிட மறுத்துவிட்டான்.

எனவே, அவனுக்கும் அவனது 'அண்ணி'க்கும் ஒரு 'திருமணம்' ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன்படி "மணப்பெண்" (அவன் அண்ணிதான்) ஒரு பெரிய செருப்புமாலையை 'மணவாளன்' கழுத்தில் மாட்டி, கரித்தூளையும் அவன் முகத்தில் பூசினாள்; பின் ஊரார் அவனை அந்தக் கோலத்திலேயே கழுதை மீதேற்றி தெருக்களைச் சுற்றி ஊர்வலமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றனர்.

திருப்பியனுப்பப்பட்ட மக்கள் எண்ணிக்கை

தென் ஆப்பிரிக்காவிலிருந்து, அச்சர்க்காரின் செலவிலேயே 643 இந்தியர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்க்கரை ஆலை இட மாற்றத்திற்கு எதிர்ப்பு

'எங்கள் பிழைப்பு என்னாவது?' என மக்கள் கூக்குரல்

மாற்றக் கூடாது என திருவாங்கூர் கட்டளை

திருவனந்தபுரம், ஏப். 27—
மத்திய திருவனந்தபுரத்தைச் சேர்ந்த திருவெள்ளாவில் உள்ள ஒரு சர்க்கரை ஆலையை எக்காரணத்தை முன்னிட்டும் வேறெங்காவது மாற்றுவதற்கு அரசாங்கம் அனுமதிக்காதென அறிவித்தது.

பம்பா ஆறு சர்க்கரை ஆலையில் உற்பத்தி லாபமாக் குறைந்து கொண்டே செல்கிறது. இதற்குக் காரணம் அந்தப் பிரதேசத்தில் நல்ல சத்துள்ள கரும்பு விளையவில்லை என்பதுதான். இதனாலேயே, சென்னை மாநிலத்தைச் சேர்ந்த விழுப்புரத்திற்கு மேற்படி ஆலையை மாற்றிவிட, அதன் நிர்வாகிகளான பாரி கம்பெனியார் உத்தேசித்தனர். ஆனால் பம்பா ஆற்றங்கரையில் உள்ள மக்களுக்கு அந்த ஆலை தான் தொழிலும், அதன் மூலம் ஜீவனமும் தருகின்றது. எனவே ஆலையை வேறெங்கும் மாற்றக் கூடாதென தொழிலாளர் பிரதிநிதிகளும் கரும்பு உற்பத்தியாளரும் சர்க்காருக்கு மனுச் செய்திருந்தனர். அதன் பேரிலேயே பிரச்னையை ஆராய்வதற்கிடையில், ஆலையை, வேறு இடத்திற்கு மாற்றலாகாது என சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

சீர்காழியில் தி. மா. மு. கழகப் பொதுக்கூட்டம்

21—4—54 மாலை 6½ மணிக்கு சீர்காழி ஈசான்ய தோப்பு யாகப்பா டாக்கீஸ் திடலில் தி. மா. மு. க. பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. சண்முகம் தலைமையில், தோழர்கள் மு. சாமிநாதன், டி. எஸ். இராமு பேசிய பின்பு தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுமார் 2 மணி நேரம் தற்கால அரசியல் நிலை என்பது பற்றி விரிவுரை யாற்றினார்.

பொதுக்கூட்டங்கள் நடத்த ஓர் மைதானம் அமைத்துக் கொடுக்கும்படி பஞ்சாயத்து போர்டை கேட்டுக்கொண்டு ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குவாகம் தி.மு.க. துவக்க விழா பொதுக்கூட்டம்

24—4—54 மாலை 6 மணிக்கு தோழர் கே. எஸ். ராகவன் தலைமையில் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆர். பாலகுருசாமி கொடியேற்றி வைத்தார்; திருச்சி தோழர் எம். எஸ். மணி, திட்டக்குடி பொன்னம்பலம் ஆகியோர் கழக கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

* * *

25—4—54 காலை 9 மணிக்கு தோழர்கள் ஆர். பாலகுருசாமி தலைமையிலும், எம். எஸ். மணி முன்னிலையிலும் செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர் : ஆர். கலியமூர்த்தி; துணைச் செயலாளர் : வே. சிங்காரவேலு; பொருளாளர் : சி. அப்பாசாமி; மாவட்டபிரதிநிதி : கே. எஸ். ராகவன்; செயற்குழு உறுப்பினர்கள் : ஆ. சாமிக்கண்ணு, வ. வைத்திலிங்கம், சா. சண்முகம், ச. ரெங்கசாமி, மகம்மது, பெ. குப்புசாமி, ர. சாமிதுரை ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 5-வது வட்ட தி. மு. கழகம்

18—4—54 மாலை 6 மணிக்கு கிளைக் கழகத்தில் சொற்பயிற்சி கூட்டம் தோழர் ச. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. "மதம்" எனும் பொருள் பற்றி பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

அயன்புரம் (21-வது வட்ட) தி. மு. கழகம்

25—4—54 காலை 9 மணிக்கு அயன்புரம் மேட்டுத் தெரு, நெ. 47 இல்லத்தில், பி. வி. கேசவன் தலைமையில், 21-வது வட்ட தி. மு. க. தேர்தல் நடைபெற்றது. செயலாளராக அ. அழகரசு, துணைச் செயலாளராக பு. வே. பார்த்திபன், பொருளாளராக சி. தங்கசாமி, மாவட்டப் பிரதிநிதியாக அ. அழகரசு, உ. கு. வில்லவன் கோதையும், 15 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கொருக்கை தி. மு. கழக துவக்கக் கூட்டம்

திருத்துறைப்பூண்டி, ஏப். 25—
21—4—54 மாலை 5 மணிக்கு தோழர் கு. நடராசன் தலைமையில் இவ்வூரில் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் : என். எஸ். இளங்கோ, செங்குட்டுவன், தங்கவேலு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கமிட்டிக் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : இரா. இராமமூர்த்தி; துணைச் செயலாளர் : சி. இராமலிங்கம்; பொருளாளர் : கு. இராசமாணிக்கம்; விளம்பர உறுப்பினர் : கு. நடராசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்

அருப்புக்கோட்டை, ஏப். 29—
24—4—54-ல், இந்நகர் டபு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத்தின் உறுப்பினர்களின் கூட்டம் இரவு 10-30 மணிக்கு படிப்பகக் கட்டடத்தில், தோழர் எம். கதிரேசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தோழர்கள் வி. பி ரத்தினம்-தலைவர்; சி. பிச்சைமுத்து-உப தலைவர்; பி. பி. என். நல்லதம்பி-செயலாளர்; எம். கதிரேசன்-பொருளாளர். பின்னர், படிப்பகத்தின் முதலாண்டு விழாவை 17—5—54-ல் நடத்துவது என்றும், புதிய கல்வித் திட்டத்தைக் கைவிடாத புதிய அமைச்சரவையைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

லண்டனில் இந்திய மாணவர் தாக்கப்பட்டனர்

உதவி செய்தவர் மூக்குடைபட்டார்

தாக்கியவர்களுக்கு மூன்று மாத சிறைத் தண்டனை

லண்டன், ஏப். 28—
மூன்று இந்திய மாணவர்கள், பாதாள ரயில் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது அவர்களை வம்புக்கிழுத்து சண்டை போட்டு அடிக்கும் பொழுது கார் என்ற பிரயாணி அவர்களுக்கு உதவி செய்யச் சென்றார். அவரையும் அடித்துத் தாக்கியதாக, 35 வயதுடைய ராய்லி என்பாரும், 27 வயதுடைய தாமஸ்பட்லர் என்பாரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் குற்றத்தையும் ஒப்புக்கொண்டனர். அதன் பேரில், அவர்களை விசாரித்த நீதிபதி அவர்களுக்கு மூன்று மாத சிறை தண்டனை விதித்தார்.

ஒரு பாதாள ரெயிலில் கார் என்பவர் பிரயாணம் செய்தார். அவருக்கு எதிராக மூன்று இந்திய மாணவர்கள் உட்கார்ந்திருந்தனர் அவர்களுக்குப் பின்புறம் ரெய்லியும், பட்லரும் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

இந்திய மாணவர்களை, கலாட்டா செய்துகொண்டு, வம்புக்கிழுத்தார் ரெய்லி; அதோடு மட்டுமின்றி, இந்திய மாணவர் ஒருவரின் முகத்திலும் ஓங்கிக் குத்தினார்; பின் தனது கையிலிருந்த 'உல்லாசப் பிரம்பினால்' அந்த மாணவர்களைத் தாக்கினார்; அங்கிருந்த பட்லரும் விழித்துக்கொண்டு ரெய்லியுடன் சேர்ந்துகொண்டார். இந்திய மாணவர்களுக்கு வேறு யாரும் உதவி செய்ய முன்வராமையினால் கார் என்பவர், அவர்களுக்கு உதவி செய்யப் போய் தன் மூக்கை உடைத்துக் கொண்டார். அவரது கண்களும் கலங்கிவிட்டன பிறகு அவருக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

தி. மு. கழக ஆண்டுவிழா

மேட்டுப்பாளையம் (தஞ்சை)

20—4—54 இரவு 8 மணிக்கு இராயநல்லூரில் மேட்டுப்பாளையம் தி. மு. கழக 4-ம் ஆண்டு விழா, தோழர் வீ இராமலிங்கம் (இராயநல்லூர் வேளாண்மைக் கழகத் தலைவர்) தலைமையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விரிவுரையாற்றுகையில், காங்கிரஸ் கற்பித்துவரும் அரசியல் பாடமாகிய "எவரும் தேர்தலில் நின்று வெற்றிபெறாமலே மந்திரிப் பதவி ஏற்று பின் ராஜ்யம் செய்யலாம்; படிப்பு அவசியமில்லாதவர்களும் முதல் மந்திரிப் பதவி வகிக்கலாம்" என்ற முறையைக் குறிப்பிட்டு புதிய கல்வித் திட்டத்தினால் மாணவர் வளர்ச்சி நமது நாட்டில் குன்றிப்போய், நமது பொருள்கள் டாலர் கணக்கில் அயல் நாடுகளில் விஞ்ஞானக் கருவிகளை வாங்குவதன் மூலம் அழிந்து வருவதையும், வரப்போவதையும் சுட்டிக்காட்டினார்.

****

சேலம் மாவட்ட தி.மு.க. மாநாடுகள்

சேலம் V. மார்க்கெட்டில் அமைத்துள்ள பரசுராமன் பந்தலில் — வள்ளியப்பன் அரங்கில் நடைபெறும்.

மே 1 : சனிக்கிழமை	மே 2 : ஞாயிற்றுக்கிழமை
சமுதாய சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர் : தோழர் ப. உ. சண்முகம்	தலைவர் : தோழர் இரெ. இளம்வழுதி, M. A., B. L
துவக்குபவர் : தோழர் கோகுல கிருஷ்ணன், B. A., B. L.	துவக்குபவர் : மதுரை தோழர் எஸ். முத்து

மற்றும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்வார்கள்

★

இரு நாட்களிலும் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் 'காதல் ஜோதி,' 'ஓர் இரவு' நாடகங்கள் நடைபெறும்

கட்டணம் :—வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி : ரூ. 3; ஆதரவாளர் : ரூ. 2; பார்வையாளர் : ரூ. 1; பெண்கள் : அணா 8.

—வரவேற்புக் குழுவினர்.

****

செய்திச்சுருள்

★

அம்பேத்கார் பிறந்த தின விழா

அரக்கோணம், ஏப். 26—
அரக்கோணத்தை அடுத்த மைனூர் தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தின் சார்பில் 24—4—54 மாலை 6 மணிக்கு நடைபெற்றது —அம்பேத்கார் அவர்களின் சேவையை பாராட்டியும்—திராவிட இயக்கம் தாழ்த்தப்பட்டோர் நிலை குறித்து, ஆரம்ப முதல் செய்த தொண்டினை விளக்கியும் தோழர்கள் ஜீ ஜெயராஜ், கே. நடராசன், ஜீ நடராசன், ராமய்யா, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி ஆகியோர் பேசினார்கள்.

* * *

பம்பாய் உரிமை வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக, 25-4-54 ஞாயிறு காலை 10 மணிக்கு எம். என். சின்னப்பா தலைமையில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 63-வது பிறந்த தின விழா கொண்டாடப்பட்டது.

அவ்வமயம் தோழர் கே. கே. குமார், அம்பேத்கார் அவர்களின் படத்தை திறந்து வைத்தார். தோழர்கள் கே. பி. வேலு, கே. கே. சிவலிங்கம், ஏ. கபீர் ஆகியோர் அம்பேத்கார் அவர்களின் தொண்டினைப் பற்றி பேசினார்கள்.

விநாயகம் குழுவினர் வழக்கு

அரக்கோணம், ஏப். 26—
விநாயகம் குழுவினர் மீது தொடர்ந்த வழக்கு 21-4-54-ல், சந்திரகிரி அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிகள் வக்கீல் வராததால் வழக்கு 28—4—54-க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மதுரை தமிழ் மன்றம்

25—4—54 10 மணிக்கு தோழர் கீ. இராமசாமி தலைமையில் செயற் குழு கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கா. சோமு செயலாளராகவும், கா. பொன்னையா பொருளாளராகவும், தா. அக்கன்னராக் கிளை பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மனைவி உயிருடன் இருக்கையில் மறுமணம்!

மனைவி உயிருடனிருக்கையில், முதலில், சர்க்கார் அதிகாரிகள் மறுமணம் செய்துகொள்ளலாகாதெனத் தடை விதிக்கும் விஷயம் சர்க்காரின் தீவிர பரிசீலனையில் இருந்து வருவதாகவும், அது எப்போது சாத்தியமாகும் என்று தாம் சொல்ல இயலாதென்றும் மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி அறிவித்தார்.

'சிதைந்த வாழ்வு'

25—4—54 மாலை 6-30 மணிக்கு சென்னை சௌந்தர்ய மகாலில், தமிழ் வளர்ச்சி மன்றச் சார்பில் 'சிதைந்த வாழ்வு' என்ற சமூக நாடகம், மன்ற வளர்ச்சி நிதிக்காக, நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார் முன்னிலையில் நடைபெற்றது. நாடக முடிவில் சம்பந்த முதலியார் நாடகத்தை பாராட்டிப் பேசினார்.

தோற்றம்

23 4-54ல், மதுரை தோழர் அ. பிச்சை அவர்கட்கு ஆண் குழவி பிறந்து, தாயும் சேயும் நலம்.

பெயர் மாற்றம்

கட்டிமேடு தோழர் செ. வேலையன் என்பவர் தன் பெயரை "செ. தமிழ்தாசன்" என மாற்றிக்கொண்டார்.

கோபால கவுண்டர் எதிர்க் கட்சியில் அமருவார்!

உழைப்பாளர் கட்சி நடத்தையின் எதிரொலி

விழுப்புரம், ஏப் 29—
சட்டசபை எதிர்க் கட்சியில் தாம் உட்காரப் போவதாகவும், தென்னாற்காடு வன்னியகுல க்ஷத்திரிய மாநாடு அடுத்த ஜூன் 6-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும், அந்த மாநாட்டின் தீர்மானத்திற்குப் பிறகு தான் காங்கிரஸ் கட்சியுடன் சேருவதா இல்லையா என்ற விவரம் தெரிவிக்க முடியும் என்றும், தமிழ்நாடு உழைப்பாளர் கட்சிப் பிரமுகரான திண்டிவனம் தோழர் வி. கோபால் கவுண்டர் எம். எல். ஏ., ஒரு பேட்டியின்போது கூறியுள்ளார்.

மனைவியைக் கண்டு வெட்கிய ஆதிவாசி!

நாகபுரி, ஏப். 27—
தன் மனைவியுடன் துர்நடத்தையில் ஈடுபட்டதாகக் கருதி ஒருவனைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஆதிவாசி ஒருவன், செஷன்ஸ் கோர்ட்டில் தன் மனைவியின் எதிரில் பேச மறுத்துவிட்டான். அவன் கோர்ட்டில் இருக்கும்வரை ஆதிவாசி அவள் முகத்தைக்கூட ஏறிட்டும் பார்க்கவில்லை.

மனோகரா மலர்

கலைஞர் கருணா, புரொட்யூசர் சோமு, டைரெக்டர் பிரசா[illegible] சம்பந்த முதலியார், சிவாஜி கணேசன், ராஜேந்திர[illegible] கண்ணாம்பா, ராஜகுமாரி, கிரிஜா, முத்துலட்சுமி, நடராச[illegible] ஆகியோரது படமும், வாழ்க்கைக் குறிப்புகளும்

அறிஞர் அண்ணா, சிற்றரசு, சத்தியவாணிமுத்து, கி. ம[illegible] கரன், அருண்மொழி, ஆசைத்தம்பி, டாக்டர் தர்மாம்பா[illegible] என். வி. நடராசன், அலமேலு அப்பாதுரை, அன்பழக[illegible] இல்லை வில்லாளன், பூங்கோதை, மூவாலூர் ராமாமிர்த[illegible] ஓவியர் அய்க்கன் ஆகியோர்களின் பாராட்டுரைகள் (பட[illegible]ளுடன்), பத்திரிகை விமர்சனங்கள், இடையே சம்ப[illegible] படங்கள்—ஆர்ட் மூவண்ண முகப்புடன் கூடியது.

விலை 8 அணா :: விற்பனைக் கழிவு 25 %.

பகுத்தறிவுப் பண்ணை, பீமநகர், திருச்சிராப்பள்[illegible]

காமராசருக்கு கார்ப்பொரேஷன் வரவேற்பு

சென்னை, ஏப். 30—
வருகிற மே. 3-ந் தேதி சென்னை மாநில முதல் அமைச்சர் கே. காமராசருக்கு, அண்ணா மேயர் டி. வேணுகோபால் அவர்கள் தலைமையில் வரவேற்பு அளிக்கப்படும்.

உருது-வங்காளி தகராறைத் தீர்க்க புது யோசனை

(:)

லீக் முடிவென நூன் கூறும் தகவல்

லாகூர், ஏப். 28—
உருது-வங்காளி மொழித்துறையில் மேற்கு பாகிஸ்தானுக்கும் கிழக்கு பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தவிர்க்க இரு மொழியினருக்கும் திருப்தி தரும் ஒரு புதிய ஏற்பாட்டை முஸ்லீம் லீக் செய்து விட்டதாக மாலிக் பெரோஸ்கான் நூன் அறிவித்தார்.

மேற்கு பாகிஸ்தானின் ஆட்சி மொழியாக உருதுவும், கிழக்கு பாகிஸ்தானின் ஆட்சி மொழியாக வங்காளியும், ஐந்தாண்டுகள் வரை நடைமுறையில் இருந்து வருவது எனவும், அக்காலத்திற்குப் பிறகு ஒரு ஆய்வுக் குழுவை நியமித்து, பாகிஸ்தானின் ஆட்சி மொழியாக இவ்விரண்டினுள் எதை ஒப்புக்கொள்வது என்பதில் முடிவு காணலாம் எனவும் அப்புதிய முடிவு கூறுவதாக அவர் அறிவித்துள்ளார். இதுபற்றி மேல் விவரம் கூற அவர் மறுத்துவிட்டார்.

முதன் மந்திரிகள் கூடிப் பேசுவதால் பிரயோசனமில்லை

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறு: டில்லிக்கு சென்னை சர்க்கார் யோசனை

சென்னை, ஏப். 29—
சென்னை-ஆந்திர எல்லைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க ஒரு எல்லைக் கமிஷனை நியமிக்கும்படி சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரை வற்புறுத்தி யிருப்பதாக சென்னை முதன் மந்திரி கூறினார்.

சென்னை, ஆந்திரா, மைசூர் முதன் மந்திரிகள் கூடிப் பேசலாம் என்ற ஒரு யோசனை வந்ததாயும், அதற்கு சென்னை சர்க்கார் எல்லைக் கமிஷனை நியமிக்கும்படி அறிவித்திருப்பதாயும் அவர் குறிப்பிட்டார்.

தகராறுகள் உள்ள பகுதிகளில் கிராமவாரியாக அந்தந்த மொழி பேசுவோரின் மக்கள் தொகை பற்றி புள்ளி விவரங்கள் இல்லாததால் முதன் மந்திரிகள் கலந்து பேசுவதில் பிரயோசனமிராது என சென்னை சர்க்கார் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தற்சமயம் கிராமவாரியாக புள்ளி விவரங்கள் இல்லாததால் பேச்சு வார்த்தை உருப்படியாக நடைபெறாது என்று நிதி மந்திரி கூறினாராம்.

சிறிது காலம் செல்லும்?

சென்னை, ஏப். 29—
மந்திரி சபையில் மலபாருக்கு பிரதிநிதித்வம் அளிக்க நிச்சயமாக ஒரு மந்திரி நியமிக்கப்படுவார் என்றும் ஆனால் எப்போது என்பதைக் கூற இயலாது என்றும், அதற்கு சிறிது காலம் செல்லும் என்றும் சென்னை முதன் மந்திரி தெரிவித்தார்.

தெரிந்து கொள்ளுங்கள்!

இந்தியாவின், ரயில்வேக்கள், 151 உயர்தர, மத்திய, ஆரம்பப் பள்ளிக்கூடங்களை நடத்தி வருகின்றன. பிராந்தியவாரியாக, கிழக்குப் பிராந்திய ரயில்வேயில் 55 பள்ளிக்கூடங்களும், தென் பிராந்திய, மேற்குப் பிராந்திய ரயில்வேக்கள் ஒவ்வொன்றிலும் 25 பள்ளிக்கூடங்களும், மத்திய பிராந்திய ரயில்வேயில் 21 பள்ளிக்கூடங்களும் வடக்குப் பிராந்திய, வட-கிழக்குப் பிராந்திய ரயில்வேக்கள் ஒவ்வொன்றிலும் 8 பள்ளிக்கூடங்களும் உள்ளன. சித்தரஞ்சன ரயில் இஞ்சின் உற்பத்திசாலையில் மொத்தம் 9 பள்ளிக்கூடங்கள் உள்ளன.

அனுதாபம்

தஞ்சை, ஏப் 26—
முத்தமிழ் வள்ளல் ஏ. ஒய். அருணாசலசாமி அவர்கள் இறந்தமை குறித்து காங்கை அன்பு மன்றம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது." என்று மன்றச் செயலாளர் அறிவிக்கிறார்.

எகிப்தில் குதிரைப் படை அதிகாரிகள் கைது

'ஐக்கிய முன்னணி' வேலை செய்தனராம்!

பிரதமர் நசீர் நடவடிக்கை

கெய்ரோ, ஏப். 29—
எகிப்திய அரசாங்கம் 12 குதிரைப் படை அதிகாரிகளையும் மற்றும் 40 பேர்களையும், "கம்யூனிஸ்ட் நடவடிக்கை"களை மேற்கொண்டார்கள் எனக் குற்றஞ்சாட்டிக் கைது செய்துள்ளது. அவர்கள் அத்தனை பேரும் சிறிது நாளில் விசாரிக்கப்படுவார்களாம்.

தன்னுடைய செயலாளர் மூலமாக, பிரதமர் நாசிர், 'நாங்கள் இந்தக் கூட்டத்தாரின் செய்கைகளை மிகக் கூர்மையாகக் கண்காணித்து வந்தோம். இப்போது இவர்களை கையும் களவுமாகப் பிடித்திருக்கிறோம்'' என்று அறிவித்துள்ளார்.

"குதிரைப்படையைச் சேர்ந்த 9 அதிகாரிகள் கடந்த மார்ச் மாதம் 5-ந் தேதி அன்று தாங்கள் உண்ணும் இடத்தில் ஒன்று கூடிக்கொண்டு, முன்பு குதிரைப் படை உயர்தர அதிகாரியையும் இப்போது யுத்தம், கப்பல் போக்குவரத்து ஆகிய இலாகாக்களின் மந்திரியாகவும், இருக்கும் ஹுசேன்ஷாபக் என்பவரை, இன்றுள்ள அரசியல் நிலை குறித்து விவாதிக்க வருமாறு அழைத்தார்களாம். கூட்டம் ஆறுமணிநேரம் நடைபெற்றது," என்று மேஜர் ஷாகர் தெரிவித்தார். மேலும் அவர் கூறினார்:—

"தங்களுடைய தொல்லையையும் குழப்பத்தையும் விளைவிக்கும் செய்கைகளை மறைப்பதற்காக அந்த அதிகாரிகள் தங்களை இடதுசாரிகள் என்றும், மக்களின் உரிமைக்காகப் போரிடுபவர்கள் என்றும் கூறிக் கொண்டனர். இதற்காக அவர்கள் எச்சரிக்கப்பட்டனர். எனவும், கர்னல், ஷாபக் தந்த உறுதிமொழியின் மேல் அவர்கள் மீண்டும் தங்கள் யூனிட்டுகளில் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டனர்."

"ஆனால் அந்த எச்சரிக்கைக்கு அவர்கள் செவி மடுக்கவில்லை. தங்கள் காரியங்களில் தொடர்ந்து ஈடுபட்டனர். ஐக்கிய முன்னணியினர் என்று தங்களைக் கூறிக்கொள்கிற பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகியவருடன் சேர்ந்து கூட்டங்கள் நடத்தினர்.

கம்யூனிஸ்டு கட்சியைத் தலைமையாகக் கொண்டு, சோஷலிஸ்டுகள், வாப்டிஸ்ட்கள், சில முஸ்லிம் தோழர்கள், ஆகியோருடன் ஐக்கிய முன்னணி இயங்குகிறது. இந்தக் கட்டம் வரை நாங்கள் அவர்களைக் கண்காணித்து வந்தோம். இப்போது அவர்களை கையும் களவுமாகப் பிடித்துவிட்டோம்."

"அவர்கள் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு திட்டமிட்டார்கள் என்று நம்பவில்லை, ஏனென்றால் அது அவர்களால் முடியாதது. ஆனால் அவர்கள் மே மாதம் 1-ந் தேதியன்று குழப்பங்கள் விளைவிப்பதற்கு திட்டமிட்டிருந்தனர்."

"இந்த நாட்டில் எந்தவிதகம்யூனிஸ்டு நடவடிக்கைகளையும், இப்போதுள்ள ராணுவ அரசாங்கம் அனுமதிக்காது."

மேலும் மேஜர் ஷாபர் சொன்னார்:— "கைது செய்யப்பட்ட குதிரைப் படை அதிகாரிகள் எல்லோரும், லெப்டினன்ட், காப்டன், ஆகிய அந்தஸ்து உடையவர்கள்"

"இவர்கள் கைது செய்யப்பட்டதைப் பற்றி நசீ என்ன நினைக்கிறார்?" என்று கேட்கப்பட்டபோது, ஷாபர் சொன்னார். "அவர், இவர்களின் நடவடிக்கைகள் அத்தனையையும் பகிரங்கமான குற்றங்கள் என, மறை சாற்றியுள்ளார்."

நடக்க இருப்பவை

நாடகக் கழகம் 4-ம் ஆண்டு விழா

1-5-54 மாலை 5-45 மணிக்கு, சென்னை நாடக கழகத்தின் 4-ம் ஆண்டு விழாவும், அகில இந்திய கிராமீய நடன, நாடக விழாவும் திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில் நடைபெறும் விழாவை சென்னை நிதி மந்திரி சி. சுப்ரமணியம் துவக்கி வைப்பார். சென்னை உயர்நீதிமன்ற பிரதம நீதிபதி பி. வி. ராஜமன்னார் தலைமை வகிப்பார்.

* * *

எட்டையபுரம் இளைஞர் தி. மு. கழகம்

கழகச்சார்பில் மே தின விழா 2—5—54-ல் நடைபெறும். தோழர்கள் கந்தசாமி, டபிள்யு. டி. துரைசாமி, கலிங்கன் ஆகியோர் பேசுவர்.

* * *

நகர இளைஞர் கழகம்

2—5—54 ஞாயிறு காலை $9\frac{1}{2}$ மணிக்கு, சூளை, மாணிக்கச் செட்டித் தெரு, 10-ம் எண்ணில், தோழியர் த. ந. அனந்தநாயகி தலைமையில், தோழர் பி. கமலநாபன், 'சென்னை நகராண்மை கழகமும், வரி வகைகளும்' என்பது பற்றிப் பேசுவார்.

* * *

கால் பந்து போட்டி

சோஷியல் சர்வீஸ் சொசைடியின் எட்டாவது ஆண்டுக் கால் பந்து போட்டி, கழகத்தின் இரவு பாடசாலை (நிதிக்காக) ஸ்டேடியம் திடலில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் மாறு வெளியூர்களிலிருந்து நான்கு 'டீம்கள்' அழைக்கப்பட்டிருக்கின்றன. 1-5-54 அன்று, மதுரையிலிருந்து வரும் டீம் சென்னை டான் பாஸ்கோ டீமுடன் விளையாடும். இதில் வெற்றி பெற்றவர்கள் 2—5—54 ஞாயிறு மாலை விம்கோவுடன் விளையாடுவார்கள். தினமும் மாலை $5\frac{1}{2}$ மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும்.

திருச்செந்தூர் வட்ட தி. மு. க. தோழர்கட்கு

"2—5—54 ஞாயிறு காலை 9 மணிக்கு, ஏரல் தமிழ் மனையில் ஸ்ரீவை-திருச்செந்தூர் வட்டத் தி. மு. கழக இணைப்புக்கூட்டம் மாவட்டத் தோழர் வெ. அருணாசலம் அவர்கள் முன்பு நடைபெறும். அவ்வமயம், முழுநேர ஊழியர் தேர்ந்தெடுத்தல்; விவசாயி, தொழிலாளர் முன்னேற்றக் கழகம் அமைத்தல் ஆகியவை பற்றி பரிசீலனை நடைபெறும். கிளைக் கழகச் செயலாளர்கள் இதையே அழைப்பாகக்கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறேன். குறிப்பு:—விவசாயி, தொழிலாளர்களை அணுகி அவர்களின் அன்றாட தேவைகளையும், பிரச்சினைகளையும் அறிந்து—அறிக்கை தயார் செய்துகொண்டு வரவும்" என்று தோழர் ச. சிவசங்கு அறிவிக்கிறார்.

ஆரம்ப ஆசிரியர்க[ள்] சங்க ஆண்டு விழ[ா]

1—5—54 மாலை $3\frac{1}{2}$ ம[ணிக்கு] புரசைவாக்கம் இ. எல். [illegible] யேப்ரிசியஸ் உயர்நிலைப் ப[ள்ளி]யில் நகர உதவி கமிஷனர் [illegible] சங்கரன் தலைமையில் [illegible] பெறும். நகரசபை சமிதி [illegible] வி. என். சுப்பராயன் விழா[வைத்] துவக்கி வைப்பார். தற்கா[லிக] மேயர் டி. என். வேணுகோபா[ல்] ராவ் நாயுடு பரிசுகள் வழ[ங்கு]வார். கண்காட்சியும், [illegible] நிலையத் திறப்பு விழாவும் [நடை]பெறும்.

* * *

ஓட்டல் தொழிலாள[ர்] சங்க ஆண்டு விழ[ா]

சென்னை நகர ஓட்டல் தொ[ழி]லாளர்கள் சங்கத்தின் 10-[ம் ஆண்டு] மாநாடு 1—5—54 மாலை 2 [மணி] முதல் 6 மணி வரை தே[illegible] கே. எஸ். ஷெட்டி தலை[மை]யில் பிராட்வே, 36-ம் எண்ணு[ள்ள] சி. எம். எஸ் செண்டினரி ஹா[லில்] நடைபெறும். அன்று இரா[வு] மணிக்கு, தங்கசாலை பன[illegible]யத்திற்கு அருகாமையிலு[ள்ள] பென்ஷனர் லேன் மைதா[னத்]தில் மே தினத்தை முன்னி[ட்டு] ஓர் பொதுக்கூட்டம் [நடை]பெறும். தோழர்கள் [illegible] பேசுவர்.

* * *

மாணவர் தினம்

பம்பாய் தாராவி முனிசி[பல்] பாடசாலையில் 2—5—54 ம[ாலை] 7 மணிக்கு, சிலுவைக் [illegible]வாடி மைதானத்தில் [நடை]பெறும். அவ்வமயம் கு[illegible] நாட்டியம், உடற்பயிற்சி, [illegible] யாடல் முதலிய கலா நிகழ்[ச்சி]கள் மாணவ மாணவிகள[ால்] நடைபெறும்.

* * *

சொற்பயிற்சி வகுப்[பு]

"2—5—54 மாலை 2 மணி[க்கு] சென்னை திருவல்லிக்கேணி [illegible] என். பாண்டியன் படிப்பகத்[தில்] சொற்பயிற்சி வகுப்பு ந[டை]பெறும். அதுசமயம் தோ[ழர்] டி. ஏ. துரை தலைமையில் 'கு[illegible]கோள்' என்பதைப் பற்றி ப[illegible] பேசுவர். அங்கத்தினர் அ[னை]வரும் இதையே அழைப்ப[ாக] ஏற்றுக்கொண்டு வருகை [தரு]மாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று செயலாளர் சண்பகவே[illegible] அறிவிக்கிறார்.

இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பிரயாணம்

☆

1—5—54 : } சேலம் மாநா[illegible]
2—5—54 : }
8—5—54 : வளவனூர்
9—5—54 : நாகப்பட்டின[ம்]

திராவிட முன்னேற்றக் கழ[க] துணைச் செயலாளர் தோழர் இரா. நெ[டுஞ்]செழியன், எம். ஏ., அவ[ர்களின்] முகவரி அலுவலகத்[illegible] அனுப்பப்பெற்று (24, கு[illegible] நாராயண செட்டித் தெ[ரு] இராயபுரம்) வெளியிடப்பெ[று]கிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,